தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணை நீர்மட்டம் 89.54 அடி

மேட்டூர் அணை நீர் மட்டம் 89.54 அடியாக உள்ளது. அணைக்கு வரும் நீரின் வரத்து 6,718 கன அடியிலிருந்து 8,298 கன அடியாக நீர் வரத்து உயர்ந்துள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 18900 கன அடி நீர் பாசனத்திற்காக வெளியேற்றப்படுகிறது.அணையின் இருப்பு 52.12 அடி உள்ளது.

### தமிழகத்தில் மழை நீடிக்கும்: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

தமிழகத்தில் மழை நீடிக்க வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

காற்றின் மேலடுக்கில் ஏற்பட்டுள்ள சுழற்சி காரணமாக தமிழகத்தில் மழை நீடிக்கும். ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வேளாண்மை தொழில் நுட்ப ஆலோசனைக் கூட்டம்

விருதுநகர் மாவட்ட வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் சார்பில் விரிவாக்கத் திட்டங்கள் செயல்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் எஸ். சுப்பையா முன்னிலை வகித்தார். இம்மாவட்டத்தில் வேளாண்மை விரிவாக்க சீரமைப்புத் திட்டம் சார்பில் வட்டார தொழில் நுட்பக் குழுவின் மூலம் விவசாயிகள் சாகுபடிகளை பெருக்கும் வகையில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதில், நவீன தொழில் நுட்பப் பயிற்சி, செயல் விளக்கம் அளித்தல், மாநிலத்துக்குள்ளும் மற்றும் வெளிமாநில பட்டறிவு பயணங்கள், விவசாய விளைபொருள் ஆர்வலர் குழு அமைத்தல், பண்ணைப் பள்ளிகள் மூலம் நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் பல்வேறு விரிவாக்கப்

பணிகள் விவசாயிகள் பயனடையும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இம்மாவட்டத்தில் 11 வட்டாரங்களில் இருந்து 220 விவசாயிகள் சூரிய ஒளியின் மூலம் இயக்கப்படும் மின்மோட்டாரின் செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் விவசாயிகள் பட்டறிவுப் பயணமாக அழைத்துச் செல்லப்பட உள்ளனர். இதற்கான ஒப்புதலும் கூட்டத்தில் வழங்கப்பட்டது. இதில், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் ஜோசப் மரிய ரெக்ஸ், உழவர் பயிற்சி நிலைய இயக்குநர் செண்பகராஜ் உள்ளிட்ட வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலையில் கனமழை

திருவண்ணாமலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை அதிகாலை வரை கன மழை பெய்தது. ஞாயிற்றுக்கிழமை மாலை மழை வருவதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. இருப்பினும் திடீரென இரவு 9.45 மணிக்கு கன மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து 2 மணி நேரத்துக்கும் மேலாக பெய்த கனமழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையத்தில் வழக்கம்போல மழைநீர் குளம்போல தேங்கியது. தொடர்ந்து, திங்கள்கிழமை காலை 7 மணி வரை விட்டு விட்டு பெய்த மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். மாவட்டத்திலேயே அதிகபட்சமாக திருவண்ணாமலையில் 78.20 மில்லி மீட்டர் மழை அளவு பதிவானது. இதுதவிர, செங்கத்தில் 7.40, சாத்தனூர் அணை பகுதியில் 1.20, போளூரில் 51.40, ஆரணியில் 28.40, செய்யாறில் 32.50, வந்தவாசியில் 53 மில்லி மீட்டர் மழை அளவு பதிவானது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விருதை மார்க்கெட் கமிட்டிக்கு 300 மூட்டை கம்பு வரத்து

விருத்தாசலம் : விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு 300 மூட்டை கம்பு விற்பனைக்கு வந்தது. விருத்தாசலம், கம்மாபுரம், மங்கலம்பேட்டை, புதுக்கூரைப்பேட்டை, கண்டியங்குப்பம், விஜயமாநகரம் பகுதிகளில் கம்பு அறுவடை தீவிரமாக நடக்கிறது. இதனால், விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று ஒரே நாளில் 300 மூட்டை கம்பு விற்பனைக்கு வந்தன. விற்பனைக்கு வந்த வேளாண் விளைபொருட்கள் நிலவரம் வருமாறு: நெல் 2,500 மூட்டை, மக்காச்சோளம் 1,000, வேர்க்கடலை 300, எள் 100 உட்பட 3,800 மூட்டை வேளாண் பொருட்கள் விற்பனைக்கு வந்தன. அதில், வேர்க்கடலை 5,829 ரூபாய்க்கும், எள் 7,375, உளுந்து 6,689, மக்காச்சோளம் 1,253, கம்பு 1,379, கேழ்வரகு 1,739, தேங்காய் பருப்பு 7,069, ஆந்திரபொன்னி 1,569, ஆடுதுறை (39) 1,308, ஆடுதுறை (43) 1,196, ஆடுதுறை (45) 1,089, அம்பாசமுத்திரம் 1,226 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டன

### காட்டுமயிலூரில் 86 மி.மீ., மழை பதிவு

கடலூர் : மாவட்டத்தில் நேற்று முன்தினம் காட்டுமயிலூரில் 86 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கடலூர் மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக இரவு நேரங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு மி.மீ., விவரம்: காட்டுமயிலூர் 86, விருத்தாசலம் 74.30, மே.மாத்தூர் 66, குப்பநத்தம் 68.80, பெலாந்துறை 55, வானமாதேவி 35, வேப்பூர் 26, பண்ருட்டி 10.10, கடலூர் 8.80, ஸ்ரீமுஷ்ணம் 8, சேத்தியாத்தோப்பு 7, கொத்தவாச்சேரி 2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. ஒரே நாளில் மாவட்டத்தில் சராசரியாக 21 மி.மீ., மழை பெய்துள்ளது.

**<u>விவசாயிகளுக்கு நீர் தெளிப்பான் வாடகையின்றி வழங்கப்படும்</u>**

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், உயிர் நீர் பாசன தேவைக்காக எடுத்து செல்லத்தக்க மழை தூவுவான் மற்றும் நீர் தெளிப்பானுடன் கூடிய பம்பு செட், விவசாயிகளுக்கு வாடகையில்லாமல் வழங்கப்படும்.இக்கருவிகள், திருவள்ளூர், திருத்தணி, பொன்னேரியில் செயல்பட்டு வரும், வேளாண்மை பொறியியல் துறை, உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களை நாடி, தங்களுக்கு தேவையான உயிர் நீர் பாசன உபகரணங்களை பெற்று பயனடையலாம்.இத்தகவலை, மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ் தெரிவித்தார்.

**<u>ஊதா நிற மிளகாய்: விவசாயிகள் வியப்பு</u>**

பந்தலுார் : பந்தலுார் பகுதியில் காய்த்துள்ள ஊதா நிற மிளகாய், விவசாயிகள் மக்கியில் வியப்பை ஏற்படுக்கி உள்ளது. நீலகிரி மாவட்டம் பந்தலுார் பகுதியில் தேயிலை விவசாயம் மட்டுமின்றி மலை காய்கறிகளும் பயிர் செய்யப்படுகின்றன. இப்பகுதியில் விளையும் சீனி மிளகாய் கிலோ 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த மிளகாய், ஆயுர்வேத சிகிச்சை மையங்களுக்கு அதிகளவில் கொள்முதல் செய்யப்படுவதால், தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக இதனை விவசாயிகள் உற்பத்தி செய்கின்றனர்.தற்போது பந்தலுாரில் பல இடங்களிலும் ஊதா நிறத்தில் மிளகாய் விளைந்துள்ளது. சாதாரண மிளகாய் செடிகளில், முதலில் பச்சை நிறத்தில் மிளகாய் காய்க்க துவங்கும். பழுத்தவுடன் சிகப்பு நிறத்திற்கு மாறிவிடும். ஆனால், தற்போது சில பகுதிகளில் மட்டும் ஊதா நிறத்தில் விளைந்துள்ள மிளகாயை, விவசாயிகள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.விவசாயி ரவிச்சந்திரன் கூறுகையில், “இந்த மிளகாய் நிறம் மாறி விளைந்தாலும், பாதிப்பு ஏதும் இல்லை. சில நாட்களில் சாதாரண சீனி மிளகாய் போன்று சிவப்பு நிறத்துக்கு மாறி விடுகிறது. நல்ல காரம் உள்ளது. இந்த நிறத்தை அனைவரும் வியப்புடன் பார்த்து செல்கின்றனர்,” என்றார்.

**<u>வேளாண்மையில் காலி பணியிடம்; நேர்காணல் மூலம் தேர்வு</u>**

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை துறையில், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் ஆலோசகர் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில்

பணிபுரிய விரும்புபவர்கள் நேர்காணலுக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆலோசகர் பணிக்கு, முதுகலை வேளாண்மை படிப்புடன் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மதிப்பூதியமாக முப்பதாயிரம் ரூபாய் மற்றும் போக்குவரத்துப்படி ரூ.1000 வழங்கப்படும். தொழில்நுட்ப உதவியாளர் பணிக்கு இளங்கலை வேளாண்மை மற்றும் கம்ப்யூட்டர் இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். மதிப்பூதியமாக இருபதாயிரம் ரூபாயும், போக்குவரத்துப்படியாக ரூ. 800 ம் வழங்கப்படும்.தகுதியான நபர்கள், செப்.29 ல் பகல் ஒரு மணிக்கு பிறகு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ழநி : கால்நடை பராமரிப்பிற்கான தீவன சாகுபடி திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் விண்ணப்பங்களை அருகில் உள்ள கால்நடை மருத்துவரிடம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு துறை சார்பில் அகத்திக் கீரைசாகுபடி, கோ-3, கோ-4 தீவன வகை புல்வளர்ப்பு, தட்டை பயறு சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இதில் பங்குபெறும் விவசாயிகள் சொந்தமாக நிலம் மற்றும் கால்நடைகள் வைத்திருக்க வேண்டும். நிழலான இடங்களில் வளர்க்கப்படும் அசோலா பாசி வகைத் தீவனத்தை கால்நடைகளுக்கு அளித்தால் அதிக பால் கிடைக்கும்.புதிய திட்டத்தின் கீழ், கால்ஏக்கர் நிலத்தில் கோ-3, கோ-4 புல் சாகுபடி செய்பவர்களுக்கு ரூ.2ஆயிரம் மானியத்தில் புல்கரணை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 4 கிலோ அகத்திக் கீரை விதைகளும், ரூ.550 மதிப்புள்ள சோளம், தட்டைப்பயிறு விதைகளும் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் தங்களின் விண்ணப்பங்களை, கால்நடை உதவி மருத்துவரிடம் வழங்க வேண்டுமென பழநி கோட்ட கால்நடை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். திண்டுக்கல், என்ற முகவரியில் நடக்கும் நேர்காணலுக்கு வரவேண்டுமென வேளாண்மை இணை இயக்குனர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>கால்நடை தீவன சாகுபடி திட்டம்; விவசாயிகள் பயன்பெற அழைப்பு</u>**

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் நேற்று மாலை 4.30 மணிக்கு சாரலுடன் பலத்த மழை பெய்தது. பஸ்ஸ்டாண்ட் பகுதியில் மழைநீர் தேங்கியதால் பயணிகள் சிரமப்பட்டனர்.

**<u>விவசாயிகளுக்கு சம்பளம் அதிகரிப்பு</u>**

தேனி : அரசு செயல்படுத்தி வரும் நூறு நாள் வேலை திட்டத்தால் விவசாய தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரித்துள்ளது. ஆண்டிபட்டி, சித்தார்பட்டி, கம்பம், உத்தமபாளையம், ஒடைப்பட்டி கடமலை- மயிலை உட்பட பல பகுதிகளில் அரசின் 100 நாள் வேலை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளி வேலைக்கு சென்றாலே அதிகபட்சம் 148 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. வேலையும் சுலபமாக உள்ளது. இதை விட கூடுதல் சம்பளம் கொடுத்தால் மட்டுமே தனியார் விவசாயிகளிடம் விவசாய தொழிலாளர்கள் வேலைக்கு செல்கின்றனர். இதனால் தோட்ட உரிமையாளர்கள் சம்பளத்தை உயர்த்தி தருகின்றனர். ஆண் விவசாயிகள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதால், ஒரு விவசாயிக்கு குறைந்தது 300 ரூபாய் கிடைக்கிறது. அதேபோல் பெண் விவசாயத் தொழிலாளர்களும் ஒப்பந்த அடிப்படையிலேயே வேலைகளை செய்து வருகின்றனர். இதனால் இவர்களுக்கு தினமும் 200 ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடைக்கிறது. விவசாய தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் உயர காரணம் நூறு நாள் வேலை திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது

**<u>வறட்சியிலும் தென்னையை காப்பாற்றும் விவசாயிகள்</u>**

தேவதானப்பட்டி : தேவதானப்பட்டி அருகே நிலவும் கடும் வறட்சியிலும் தென்னை மரங்களுக்கு நூதன முறையில் நீர்ப்பாய்ச்சி விவசாயிகள் காப்பாற்றி வருகின்றனர். பெரியகுளம் தாலுகாவில் மழை இல்லாததால் குளம், குட்டைகள், கண்மாய், ஊரணி போன்ற நீர்நிலைகள் அனைத்தும் வறண்டு கிடக்கின்றன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் 600 அடிக்கும் கீழ் சென்று விட்டது. குள்ளப்புரம், எருமலைநாயக்கன்பட்டி போன்ற சில

ஊர்களில் 900 அடிக்கு கீழ் நீர்மட்டம் சென்று விட்டது. பல கிராமங்களில் விவசாயப்பணிகள் முடங்கிப் போயுள்ளது. சில இடங்களில் கிடைக்கின்ற குறைந்தளவு நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி பயிர்களை காப்பாற்றி வருகின்றனர்.ஜெயமங்கலத்தில் ஒரு விவசாயி தென்னை மரங்களின் வேர்களுக்கு மட்டும் நீர்பாய்ச்சி மரங்களை காத்து வருகிறார்.இது போல் பல்வேறு சிக்கன நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். *குட்டையில் தேக்கி பாசனம்: தேவதானப்பட்டி அருகே கர்மலிங்கபுரத்தில் ஜங்கால் என்ற விவசாயிக்கு சொந்தமான தோட்டம் முருகமலை அடிவராத்தில் உள்ளது. ஒரு "போர்வெல்' மூலம் 6 ஏக்கரில் தென்னை, பூக்கள், பப்பாளி மற்றும் சீமைப்புல் சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார். மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்யும் மழை நீர் இப்பகுதிக்கு நிலத்தடி நீராதாரமாக உள்ளது. இப்பகுதியில் தொடர்ந்து வறட்சி நிலவுவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. இதனால் பயிர்களை காப்பதற்காக தரைப்பகுதியில் ஊரணி போன்று கரைகளை கட்டினார் ஜங்கால். இரவு முழுவதும் போர்வெல் மின்மோட்டாரை இயக்கி அதில் கிடைக்கும் குறைந்தளவு நீரைத் தேக்கி பகலில் அந்த நீரை பாசனத்திற்கு பயன்படுத்தி மூன்றாண்டு தென்னை மரங்கள் மற்றும் பூக்களை காப்பாற்றி வருகிறார். ஜங்கால் கூறியதாவது: போர்வெல்லில் கிடைத்த நீரை நேரடியாக பாசனத்திற்கு பயன்படுத்தி வந்தேன். தற்போது நீரின் அளவு குறைந்து விட்டதால் நேரடியாக நிலத்திற்கு பாய்ச்ச முடியவில்லை. இதனால் நீரைத் தேக்கி வைத்து பயன்படுத்தி வருகிறேன். குறைந்த அளவு நீரை சிக்கனமாக பயன்படுத்தி நல்ல விளைச்சல் எடுக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது,என்றார்.

## <u>பழங்கள், மலர் உற்பத்தியை அதிகரிக்க தாராள மானியம்</u>

தேனி : பழங்கள், மலர்கள், வாசனை பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க தோட்டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானியம் தாராளமாக வழங்கப்படுகிறது. தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் அடர் நடவு திட்டத்தில் 2500 ஏக்கரில் மா சாகுபடி செய்ய ஒரு கோடி ரூபாயும், 250 ஏக்கரில் கொய்யா சாகுபடிக்கு 17 லட்சத்து 59 ஆயிரம், 125 ஏக்கரில் திராட்சை சாகுபடிக்கு 15 லட்சம், 250

ஏக்கரில் அன்னாசி சாகுபடிக்கு 26 லட்சத்து 25 ஆயிரம், 2250 ஏக்கரில் வாழை சாகுபடிக்கு 2 கோடியே 30 லட்சம், 500 ஏக்கரில் பப்பாளி சாகுபடிக்கு 46 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மானியம் பெற விரும்பும் விவசாயிகள் கட்டாயம் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்திருக்க வேண்டும். சாதாரண நடவு திட்டத்தில் 250 ஏக்கர் மா சாகுபடி செய்ய 77 லட்சம் ரூபாய், 1250 ஏக்கரில் எலுமிச்சை சாகுபடிக்கு 60 லட்சம், மா அதிநெருக்கு நடவு திட்டத்தில் 125 ஏக்கரில் சாகுபடி செய்ய 14 லட்சம் ரூபாய், 425 ஏக்கரில் கொய்மலர்கள் சாகுபடிக்கு 38 லட்சம், 1250 ஏக்கரில் கிழங்கு மலர்கள் சாகுபடி செய்ய 16 லட்சம், 2000 ஏக்கரில் உதிரி மலர்கள் சாகுபடிக்கு 76 லட்சம் ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் பெல்லாரி வெங்காயம் சாகுபடி 250 ஏக்கருக்கு 24 லட்சம் ரூபாய், ஆயிரம் ஏக்கரில் மிளகாய் சாகுபடிக்கு 42 லட்சம், 625 ஏக்கரில் கொத்தமல்லி சாகுபடி செய்ய 30 லட்சம், வெள்ளைபூண்டு 500 ஏக்கரில் சாகுபடி செய்ய 24 லட்சம், இஞ்சி 225 ஏக்கரில் சாகுபடிக்கு 12 லட்சம், 1500 ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்ய 12 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராம்பு, ஜாதிக்காய் 125 ஏக்கரில் சாகுபடிö சய்ய 10 லட்சம் ரூபாய், 1700 ஏக்கரில் மிளகு சாகுபடிக்கு ஒரு கோடியே 34 லட்சம், 50 ஏக்கரில் ரோஸ்மேரி வாசனை திரவியம் சாகுபடிக்கு 8 லட்சம், 150 ஏக்கரில் இதர வாசனை திரவியங்கள் சாகுபடி செய்ய 24 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 2000 ஏக்கரில் கொட்டை முந்திரி சாகுபடி செய்ய 84 லட்சம் ரூபாய், 2500 ஏக்கரில் கோகோ சாகுபடிக்கு 1 கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டங்களுக்கான பயனாளிகள் தேர்வு தோட்டக்கலைத்துறை மூலம் நடந்து வருகிறது.

## <u>கால்நடை மருத்துவ முகாம்</u>

மேஸ்வரம் : ராமேஸ்வரம் சம்பை கிராமத்தில் கால்நடை பாதுகாப்பு முகாம் நடந்தது. முகாமில் ஆடு, மாடுகளை கால்நடை உதவி டாக்டர் வீரமணிகண்டன் பரிசோதித்தார். பின், கால்நடைக்கு நோய் தடுப்பு ஊசி, குடற்புழு நீக்க மருந்து வழங்கி, செயற்கை முறையில் கருவூட்டல்

செய்யப்பட்டது. கால்நடை ஆய்வாளர் கணேசன், சம்பை கிராம தலைவர் பாண்டி, நகராட்சி கவுன்சிலர் முத்துமுனியாண்டி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் சீனிவாசன் பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டிசம்பர் 1ம் தேதி முதல் தேயிலை தூள் ஆன்லைனில் ஏலம்**




குன்னூர் : பான் இந்தியா திட்டத்தின் கீழ் ஆன்லைன் மூலம் தேயிலை தூள் ஏலம் டிசம்பர் 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்க (உபாசி) தலைவர் விஜயன் ராஜேஷ் வெளியிட்டுள்ள அறிக்கை:தேயிலை தூள் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து தென்னிந்தியாவில் சராசரியாக கிலோ ஒன்றுக்கு ^87 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. விலைவாசி உயர்வால், ஒரு கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்ய ரூ.175 வரை செலவு ஏற்படுகிறது. கால நிலை மாற்றம், ஏற்றுமதி குறைவு உள்ளிட்ட பல காரணங்களால் தேயிலை தொழில் வெகுவாக பாதித்துள்ளது.தேயிலை ஏற்றுமதியை பொறுத்தவரை கென்யா, சீனா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு அடுத்து 4வது இடத்தில் இந்தியா

உள்ளது. வரும் நாட்களில் ஏற்றுமதியை அதிகரிக்க தேயிலை வாரியம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் 5ம் இடத்திலுள்ள வியட்நாம் 4ம் இடத்தை பிடித்து விடும். இந்திய தேயிலை உற்பத்தியில் தென்னிந்தியாவில் 20 சதவீத உற்பத்தி மட்டுமே மேற்கொள்ளப் பட்டுள்ளது.ஏற்றுமதி இந்தாண்டு 35 சதவீதத்திற்கு குறைவாக தான் செய்யப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இது 50 சதவீதமாக இருந்தது. இதற்கு முக்கிய காரணம் ஏற்றுமதியாளர்கள் அதிகம் விரும்பும் ஆர்த்தோ டெக்ஸ் ரக தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது தான். டிசம்பர் மாதம் 1ம் தேதி முதல் உபாசி மூலம் ஆன் லைன் உதவியுடன் பான் இந்தியா திட்டத்தின் கீழ் ஏலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் தேயிலை தூளின் விற்பனை அளவும் உயரும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு விஜயன் ராஜேஷ் கூறினார்.

## <u>சாமந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்</u>

ரிஷிவந்தியம்: ரிஷிவந்தியம் ஒன்றியத்தை சேர்ந்த திருவரங்கம், கள்ளிப்பாடி ஆகிய பகுதி விவசாயிகள் கரும்பு, நெல், மணிலா, சோளம் ஆகிய பயிர்களை சாகுபடி செய்வது வழக்கம். இந்நிலையில் கடந்த ஆண்டு பருவமழை ஏமாற்றியதால், விவசாயத்திற்கு போதிய நீர் இன்றி அவதிப்பட்டு வந்தனர்.பயிர் செய்திருந்த பயிர்கள் தண்ணீரின்றி கருகியது. இதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டம் அடைந்தனர். இந்நிலையில் ரிஷிவந்தியம் உள்ளிட்ட பகுதிகளில் லேசான மழை அவ்வப்போது பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மேலும் நீண்ட கால பயிர்களை சாகுபடி செய்வதை தவிர்த்து, குறுகிய காலத்தில், குறைந்த முதலீட்டில் அதிக விளைச்சல் தரும் சாமந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.திருக்கோவிலூர், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் சாமந்தி பூ விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ ரூ. 40 வரை விலை போவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்; 30ல் நடக்கிறது**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் உள்ளாட்சி இடைத்தேர்தல் நடந்து முடிந்ததை தொடர்ந்து, வரும் 30ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது.தர்மபுரி மாவட்டத்தில் உள்ளாட்சி இடைத்தேர்தல் நடந்து முடிந்ததால், இன்றுடன்(23ம் தேதி) தேர்தல் நன்னடத்தை விதி முறை காலாவதியாகிறது. இனி வழக்கம்போல் திங்கட்கிழமை தோறும் நடக் கும் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம், மாதம் ஒரு முறை நடக்கும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடக்கும். இதன்படி, தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30ம் தேதி (செவ்வாய்) மதியம் 11 மணிக்கு கலெக்டர் அலு வலக கூட்டரங்கில் நடக்கிறது. இதில் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயம் சம்பந்தமான தங்களது குறைகளையும், கருத்துக்களையும் எடுத்துக்கூறி பயனடையலாம்.

**தேவிமங்கலத்தில் 64.80 மிமீ மழை**

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் ஜங்சன் தவிர மற்ற பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. அதிகபட்சமாக தேவிமங்கலத்தில் மட்டும் 64.80 மி.மீ மழை பெய்துள்ளது. நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீ) வரு மாறு: லால்குடி 4, மணப் பாறை 15.60, புள்ளம்பாடி 25.40, தா. பேட்டை 7, மருங்காபுரி 5.20, நந்தி யார் தலைப்பு 20, கள்ளக்குடி 24.10, வாத்தலை அணை க்கட்டு 11.40, சமயபுரம் 9, தேவிமங்கலம் 64.80, திருச்சி ஜங்சன் 2.10. மாவட்டத்தில் மொத்தம் 189.3 மி.மீ மழை பெய்துள்ளது. சராசரியாக 7.89 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

## செப்.26ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திண்டுக்கல், : மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26ம் தேதி காலை 10 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. கடந்த கூட்டத்தில் (செப்.21) அளிக்கப்பட்ட மனுக்கள் மீதான கோரிக்கைகள் குறித்து இதில் விவாதிக்கப்படும். கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்க ளது குறைகளை தெரிவிக்கலாம். மனு அளிக்கும் விவசாயிகள் துரித நடவடிக்கைக்காக இரண்டு நகல்கள் அளிக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டு கொண்டுள்ளது.

## நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு செயல் விளக்கம்

சிவகங்கை, : வேளாண்துறை மூலம் நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்வது குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட உள்ளது. சிவகங்கை வட்டார வேளாண் உதவி இயக்குநர் தனபாலன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதா வது: நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால் மகசூல் அதிகமாவதுடன், லாபமும் அதிகரிக்கும். பை நாற்றங்கால் தயாரித்து குறிப்பிட்ட அளவுள்ள பாலிதீன் பையில் துவரை விதைகளை நடவு செய்ய வேண்டும். இதற்கு ஒரு ஹெக்டேருக்கு 3கிலோ விதையை பயன்படுத்த வேண்டும். 20முதல் 25நாள் வயதுள்ள நாற்றுகளை 15செ.மீ அளவுள்ள குழியில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 20, 30ம் நாட்களில் நுனியை கிள்ளிவிட வேண்டும். பூ வரும் சமயத்தில் 2சதவீத டிஏபி கரைசலை 15நாள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் பூச்சி நோய் மேலாண்மை தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். விதை அளவு குறை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் குறைவாக இருப்பதால் சாகுபடி செலவு குறைத்து மகசூல் 30முதல் 40சதவீதம் வரை கூடுதலாக கிடைக்கும். சொட்டுநீர் பாசன முறையில் சாகுபடி செய்வதன் மூலம் நீர் செலவை குறைத்து, களையை கட்டுப்பாட்டுடன் வறட்சியை தாங்கும் நல்ல மகசூல்

கிடைக்கும். இந்த தொழில் நுட்பம் குறித்த செயல்விளக்கத்திடல் அரசு மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. விரைவில் தொடர்பு கொள்ளும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம், அட்மா திட்டம், சிவகங்கை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தளியில் மகளிர் பண்ணை குழு அறிமுக கூட்டம்

தேன்கனிக்கோட்டை: தளி வட்டாரத்தில் இடு பொருள்கள் உற்பத்தி உள்ளிட்ட விவசாய பணிகள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய செயல்பாடுகள் ஆகியவற்றில் மகளிருக்கு பயிற்சி வழங்கும் மேம்பாடு திட்டம் 2014-15 கீழ் அம்மா மகளிர் பண்ணை குழு தேன்கனிக்கோட்டை அருகே அந்தேவனப்பள்ளி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அறிமுக கூட்டம் தளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தரமான உரங்கள் உற்பத்தி செய்யும் முறை பற்றியும், உயிர் உரங்கள் உற்பத்தி, மண்புழு உரம் உற்பத்தி, ஆடு வளர்ப்பு, காளான் வளர்பு முறை, விளை பொருட்கள் சந்தை படுத்துதல் பற்றியும், தெளிவாக வேளாண்மை உதவி இயக்குநர் ராமலிங்கம் எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் பாரதி நன்றி கூறினார்.

## புதிய, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்காக அமராவதி அணையில் தண்ணீர் திறப்பு

உடுமலை: புதிய, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்காக அமராவதி அணையில் இருந்து நேற்று காலை தண்ணீர் திறந்து விடப்பட்டது. உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டு தோறும் ஜூன் முதல் மார்ச் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆற்று வழியாகவும், செப்டம்பர் முதல் ஜனவரி வரை புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்படும். 90 அடி நீர்மட்டம் கொண்ட அணையில், தற்போது 80 அடிக்கு தண்ணீர் இருக்கிறது. எனவே வழக்கம் போல் புதிய, பழைய ஆயக்கட்டுகளுக்கு

தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதனை ஏற்று தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி, நேற்று காலை 9 மணிக்கு அணையில் இருந்து ஆற்றிலும், பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்நிகழ்ச்சியில், கலெக்டர் கோவிந்தராஜ், அமைச்சர் ஆனந்தன், துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், எம்பி மகேந்திரன், எம்எல்ஏக்கள் சண்முகவேலு, பொன்னுசாமி, ஆனைமலை புலிகள் காப்பக இயக்குனர் ஸ்ரீவத்சவா, தாசில்தார் சைபுதீன் மற்றும் விவசாயிகள் சங்க நிர்வாகிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் பங்கேற்றனர். ஆற்றில் 1500 கனஅடியும், கால்வாயில் 440 கனஅடியும் திறக்கப்பட்டது. இது படிப்படியாக அதிகரிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஐந்து நாள் அடைப்பு, 10 நாள் திறப்பு என்ற அடிப்படையில் மொத்தம் 120 நாட்களுக்கு தண்ணீர் விடப்படுகிறது. இதன் மூலம் பழைய ஆயக்கட்டு பாசனத்தில் 21,860 ஏக்கர் நிலமும், புதிய ஆயக்கட்டு பாசனத்தில் 25,250 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும். இங்கு விவசாயிகள் நெல், தென்னை, கரும்பு அதிகளவில் பயிரிட்டுள்ளனர். சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர் திறக்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>விவசாயிகள் குறைதீர் கூட்டம் 26ம் தேதி நடக்கிறது</u>

புதுக்கோட்டை: புதுகை கலெக்டர் மனோக ரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26 தேதி அன்று காலை 10 மணிக்கு புதுக் கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத் தில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை தெரி வித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## சம்பா சாகுபடி உழவுக்கு புதிய இரும்பு கலப்பையை பயன்படுத்தினால் மகசூல் கூடும்

நாகை: புதிய நவீன இரும்பு கலப்பையை பயன்படுக்கினால் மண்ணின் காற்றோட்டத்திற்கு வழி ஏற்பட்டு மகசூல் கூடும் என்று வேளாண் அதிகாரி அறிவுறுக்கியுள்ளார். இது குறிக்கு சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய தலைவர் முனைவர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது; நாகை மாவட்டத்தில் தற்போது சம்பாசாகுபடி பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. உழவுக்கு விவசாயிகள் புதிய நவீன இரும்பு கலப்பையை பயன்படுக்கலாம். நவீன இரும்பு கலப்பையில், கலப்பையின் கருத்தடியை தவிர மற்ற பாகங்கள் அனைத்தும் இரும்பினால் செய்யப்பட்டவை. மரக்கலப்பையில் கொழு தேய்ந்து விட்டால் அதை மாற்றியாக வேண்டும். ஆனால் இரும்புக் கலப்பையில் கொழு தேயத்தேய தீட்டி வைத்து கொள்ளும் வசதி உள்ளது. இரும்பு கலப்பையில் கொழு கலப்பையின் உடல் பாகத்தின் அடிப்புறத்தில் பொருத்தப்பட்டு இருப்பதால் மண் தங்கு தடையின்றி திருப்பிப் போட ஏதுவாகிறது. மாடுகளின் உயரத்திற்குகேற்ப கருத்தடியின் உயரத்தை மேலும் கீழும் மாற்றி வைத்து, கலப்பை உழும் ஆழத்தை மாற்றி அமைத்து கொள்ளலாம். உழும் ஆட்களின் உயரக்கிற்கு ஏற்றவாறு கைப்பிடி உயரத்தையும் மாற்றிக் கொள்ளலாம். இந்த கலப்பையின் அடிப்பாகம் முழுவதும் இரும்பினால் செய்யப் பட்டிருப்பதால் தேய்மானம் குறைவு. மண்ணை புரட்டி போடுவதற்கான வளைதகட்டை கலப்பையின் மேற்பகுதியில் பொருத்தி கொள்ளலாம். உழும் ஆழத்தை எளிதாக மாற்றிக்கொள்ளலாம். நிலத்தில் ஈரப்பசை உள்ள போது மண்ணின் மேல் மட்டத்தை குண்டக்கா அல்லது நாடடுக்கலப்பை கொண்டு கிளறி விட்டால் மண்ணின் மேல் பாகத்தில் உள்ள நுண்துளைகள் அடைபடுவதால் மழைநீர் மண்ணில் இருந்து ஆவியாவதை குறைக்க முடிகிறது. உளிக்கலப்பையால் ஒரு நாளில் ஒரு மீட்டர் இடைவெளியில் 1.4 ஹெக்டர் உழவு செய்யலாம். இக்கலப்பை குறைந்த இழுவிசை மற்றும் அதிக செயல்திறன் கொண்டது. இதன் கொழு 20 டிகிரி கோணமும், 25 மி.மீ. அகலமும், 150 மி.மீ நீளமும் கொண்டது. இக்கலப்பை 3 மி.மீ. தகட்டினால் ஆன நீள் சதுர இரும்பு குழல்களால் ஆன சட்டத்தை

கொண்டுள்ளது. இக்கலப்பையின் சட்டம் மிக நவீன உத்திகளுடன் கம்ப்யூட்டரின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் சட்டம், கொமு, கொமுதாங்கி என 3 பாகங்கள் மட்டும் உண்டு. இக்கலப்பை எதிர்பாராத அதிகப்படி விசையினால் பாதிக்கப்படாதவண்ணம் பாதுகாப்பு அமைப்பை கொண்டுள்ளது. இக்கலப்பையை கொண்டு 40 செ.மீ. வரை ஆழ உழவு செய்யலாம். இக்கலப்பையை 35 முதல் 45 குதிரைத்திறன் கொண்ட டிராக்டர்களால் எளிதாக இயக்கலாம். ஆழமாக உழுவதால் கடினப்படுகை தகர்க்கப்பட்டு மண்ணின் நீர்சேமிப்பு தன்மை அதிகமாகிறது. பயிரின் வேர்கள் அதிக ஆழம் வரை ஊடுருவ முடிகிறது. நிலங்களில் உழவு செய்யும்போது குறுக்கு மற்றும் நெடுக்காக உழவு செய்ய வேண்டும். இதனால் பெய்யும் மழைநீர் ஆங்காங்கே சால்களில் தேங்கி நின்று மண்ணின்அடிப்பகுதிக்கு சென்றடைகிறது. மேலும் பயிரிடப் படும் நிலத்தை சரிவு மட்ட, தடை வரப்புகளை வடிகால் அமைப்புடன் அமைக்க வேண்டும். இதனால் பெய்யும் மழைத்துளிகள் வேகமாக வழிந்துவிடாமல் நிதானமாக வழிந்து செல் வதால் மண்ணில் அதிக நீர் உறிஞ்சப்படுகிறது. தமிழக விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக மாடுகள் இல்லாமல் டிராக் டர் மூலம் நிலத்தை பண்படுத்துவதால் மண்ணின் காற்றோட்டம் பாதிக்கப்படுவதுடன் நீர் மண்ணின் அடிப்பாகத்திற்கு செல்வது தடைப்படுகிறது. ஆகவே ஆண்டுதோறும் கோடை உழவு செய்வதுடன்,3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உளி கலப்பை கொண்டு உழவு செய்வதால் அடிமண் இறுக்கத்தை நீக்கி மண்ணின் காற்றோட்டத்திற்கு வழி ஏற்பட்டு மகசூல் கூடும். எனவே விவசாயிகள் அனைவரும் புதிய நவீன இரும்பு கலப்பையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

நாகை: நாகை மாவட்டம் சிக்கல் வேளாண். அறிவியல் நிலையத்தில், காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலா ண்மை குறித்த விழிப்புண ர்வு பயிற்சி நடைபெற்றது. வேளாண். அறிவியல் நிலைய தலைவர் ராஜேந்திரன் பயிற்சியை தொடங்கி வைத்தார். முனைவர் தில கம் வரவேற்றார். முனைவர் ரவி காய்கறி சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து

விளக்கினார். முனைவர் அனுராதா காய்கறி சாகுபடியில் உர மேலாண்மை குறித்தும், முனைவர்கள் இளையரா ஜா, அழகர் ஆகியோர் பூச்சி கட்டுப்பாட்டில் விதை நேர்த்தியின் முக்கியத்துவம், இயற்கை மற்றும் உயிரியல் முறையில் பூச்சி கட்டுப்பாடு, இனக்கவர்ச்சிப்பொறி, பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளின் உபயோகம் குறித்து விளக்கினர். ஒருங்கிணைந்த நோய் மேலாண் மை குறித்து உதவி பேராசிரியர் முனைவர் அகிலா தேவி விளக்கினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நோய் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப கையேடு வழங்கப்பட்டது. ஏற்பாடு களை வேளாண். அறிவி யல் நிலைய தொழில் நுட்ப அலுவலர் ஞான பாரதி செய்திருந்தார்.

## <u>கம்பத்தில் விவசாயிகளை மகிழ்ச்சியில் நனைய வைத்த மழை</u>

கம்பம், : கம்பத்தில் நேற்று பெய்த சாரல் மழையால், மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கம்பத்தில், கம்பம்மெட்டு மலை அடிவாரப்பகுதிகளில், மானாவாரி நிலங்களில், பருவ மழையை எதிர்பார்த்து மொச்சை, சோளம், சூரியகாந்தி, தட்டை பயறு போன்றவை பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், மானவாரி பயிர்களுக்கு போதிய மழை இல்லாமல் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். மேலும், கடந்த சில தினங்களாக கம்பம் நகர் பகுதியில் கடும் வெயில் வாட்டி வதைத்தது. இந்நிலையில், நேற்று மதியம் திடீரென சாரல் மழை பெய்தது. இது சுமார் ஒரு மணி நேரம் வரை நீடித்தது. இதனால், மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். போடி: இதேபோல, போடி பகுதியில் கடந்த ஒருமாதகாலமாக மழை இல்லாத நிலையில் பகல்வேளையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. 45 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி வந்த நிலையில் பகல் வேளையில் நகரின் கடைவீதிகளில் மக்களின் நடமாட்டம் குறைவாக இருந்தது. இந்நிலையில், நேற்று திடீரென பரவலாக சாரல் மழை பெய்தது. தொடர்ந்து ஓருமணிநேரம் பெய்த சாரல் மழையினால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இதனால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## மாணவர்கள், விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி

புவனகிரி: சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்மை பிரிவு இறுதி ஆண்டு மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் சேத்தியாத்தோப்பு அருகே உள்ள ஒரத்தூர் கிராமத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் கிராமத்தில் கணக்கெடுப்பு பணி, துப்புரவு பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்து வருகின்றனர்.இதன் ஒரு பகுதியாக மாணவர்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி நடந்தது. ஒரத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் புலவர் கருணாகரன் தலைமை தாங்கினார். இதில் விவசாயிகள், வேளாண்மை மாணவர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் நேரடி நெல் விதைப்பு குறித்தும், மண்வளம் பற்றியும் மாணவர்களும், விவசாயிகளும் கலந்துரையாடி பல்வேறு பயனுள்ள தகவல்களை அறிந்து கொண்டனர்.

## விவசாயிகள் 12,863 பேருக்கு ரூ.13.48 கோடி பயிர் இழப்பீடு

ஈரோடு: தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின்கீழ் 12 ஆயிரத்து 863 விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டு தொகையாக ரூ.13.48 கோடி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கிருஷ்ணராஜ் தெரிவித்தார். ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 34வது ஆண்டின் பொது பேரவை கூட்டம் மல்லிகை அரங்கில் நடந்தது. மேலாண் இயக்குநர் ஹேமா வரவேற்றார். விழாவிற்கு தலைமை தாங்கிய மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கிருஷ்ணராஜ் பேசியதாவது: 2013,14 நிதியாண்டில் உறுப்பினர் சங்கங்களிடமிருந்து பங்கு தொகையாக ரூ.8.24 கோடி திரட்டப்பட்டு தற்போது வங்கியில் 46.66 கோடி ரூபாய் இருப்பு தொகையாக உள்ளது. வைப்பு நிதியாக 1,272 கோடி ரூபாயும், மொத்த வைப்புகளில் குறைந்த வட்டி விகித வைப்புகளான சேமிப்பு மற்றும் நடப்பு கணக்குகளின் இருப்பு தொகையாக 159 கோடியே 42 லட்சம் ரூபாயும் உள்ளது. 2013,14ம்ஆண்டில் பயிர்க்கடனாக 349 கோடி ரூபாயும், மத்திய கால விவசாய கடனாக 20 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. பயிர்க்கடனை உரிய தவணை தேதியில் திருப்பி செலுத்தும்

விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. வட்டி முழுவதும் தமிழக அரசே ஏற்றுக் கொள்கிறது. இந்த திட்டத்தின்கீழ் ரூ.19.37 கோடி பெற்று வழங்கப்பட்டுள்ளது. பயிர் இழப்பீட்டு தொகையாக 12 ஆயிரத்து 863 பேருக்கு ரூ.13.48 கோடி தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின்கீழ் பெறப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2012ம்ஆண்டு காரீப் பருவத்திற்கான இழப்பீட்டு தொகையாக ரூ.13.19 கோடி வரப்பெற்றுள்ளது. இந்த தொகை சங்கங்களுக்கு வழங்கப்படும். மத்திய கால விவசாய கடன்களால் கறவை இனங்கள் வளர்க்க நமது மாவட்டத்தில் 3 ஆயிரத்து 500 பேருக்கு ரூ.4.71 கோடி நபார்டு வங்கி மூலமாக மானியம் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. தானிய ஈட்டு கடனாக ரூ.32.50 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் ரூ.42.85 கோடி வழங்கப்பட்டுள்ளது. 187 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.137 கோடி வழங்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் மூலம் புத்துயிரூட்டுதல் சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் 157 சங்கங்களுக்கு ரூ.5.29 கோடி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 2013,14ம்ஆண்டில் 2 ஆயிரத்து 219 குழுக்களுக்கு 29 கோடியே 65 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 185 மாற்றுதிறனாளிகளுக்கு ரூ72.46 லட்சம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. பண்ணைசாரா கடன்கள் திட்டத்தில் வீட்டுவசதி கடனாக ரூ.4.45 கோடியும், அடமான கடனாக ரூ.69.79 லட்சமும், சம்பள கடனாக ரூ7.10 கோடியும், சிறு வணிக கடனாக ரூ3.43 கோடியும், சிறுதொழில் கடனாக ரூ.59.50 லட்சமும், தேசிய சேமிப்பு பத்திர ஈட்டுகடனாக ரூ.1.40 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 2013,14ம்ஆண்டில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 14 கோடியே 46 லட்சத்து 69 ஆயிரத்து 204 ரூபாய் நிகர லாபம் ஈட்டியுள்ளது. நடப்பாண்டில் புன்செய்புளியம்பட்டி, கவுந்தப்பாடி, சத்தி, சிவகிரி ஆகிய கிளைகளை நவீனமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு கிருஷ்ணராஜ் பேசினார். இந்த கூட்டத்தில் மண்டல இணைப்பதிவாளர் ராமதாஸ், துணை தலைவர் சந்திரசேகரன், ஈரோடு கூட்டுறவு ஒன்றிய தலைவர் தெய்வநாயகம், ஈரோடு

ஆவின் துணை தலைவர் சுப்ரமணியம், கைத்தறி மற்றும் துணிநூல்துறை உதவி இயக்குநர் ராமலிங்கம், செல்வராஜ், சித்தையன், முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், கோ,ஆப்டெக்ஸ் இயக்குநர் கோபாலகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவி ல் வங்கியின் முதன்மை வருவாய் அலுவலர் தியாகராஜன் நன்றி கூறினார்.

**<u>அந்தியூர் விற்பனை கூடத்தில் ரூ.44 லட்சத்துக்கு விளைபொருள் ஏலம்</u>**

அந்தியூர் : அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமையன்று விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை நடைபெறும். நேற்றைய ஏல விற்பனைக்கு 27 ஆயிரம் தேங்காய்கள் வந்து இருந்தன. இதில் தேங்காய் ஒன்று ரூ.7.30 முதல் 18.70 ரூபாய் வரை மொத்தம் 2 லட்சத்து 70 ஆயிரத்துக்கு ஏலம் போனது. தேங்காய் பருப்பு 200 மூட்டைகள் கிலோ ரூ.96.29 முதல் 108.59 வரை ரூ.8 லட்சத்திற்கு விலை போனது. 15 மூட்டை எள் கிலோ ரூ.105.63 முதல் 112.89 வரை ரூ.1 லட்சத்து த்து 50 ஆயிரத்துகு விற்பனை செய்யப்பட்டது. ஆமணக்கு 4 மூட்டைகள் கிலோ ரூ.36.28 முதல் 37.69 வரை ரூ.10 ஆயிரக்கும் மக்காச்சோளம் 60 மூட்டைகள் கிலோ ரூ.12.11 முதல் 12.79 வரை ரூ.70 ஆயிரத்திற்கும் பருத்தி 2 ஆயிரம் மூட்டைகள் பி டி காட்டன் ரகம் கிலோ ரூ.42 முதல் 47 வரை ரூ.30 லட்சத்திற்கும் ஏலம் போனது. நிலக்கடலை 70 மூட்¬ டகள் விற்பனைக்கு வந்திருந்தன. இதில் பச்சை நிலக்கடலை கிலோ ரூ.22 முதல் 34 வரை ரூ.90 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. மொத்த விவசாய விளைபொருட்கள் ரூ.43 லட்சத்து 90 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

**<u>கிராமத்தில் விளையும் காய்கறிகளுக்கு வரவேற்பு</u>**

ராமநாதபுரம், :ராமநாதபுரம் மாவட்டத்தில் கிராமங்களில் விளையும் காய்கறிகளுக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது. ராமநாதபுரம் சந்தையில் விற்பனைக்கு குவிந்துள்ள காய்கறிகளை ஏராளமானோர் வாங்கிச்செல்கின்றனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் நெற்பயிருக்கு அடுத்து

பணப்பயிர்களான மிளகாய், பருத்தி சாகுபடி செய்து வரும் விவசாயிகள் தங்களது வருமானத்தை பெருக்கும் வகையில் காய்கறிகளை சாகுபடி செய்து பலனடையலாம் என வேளாண்மைதுறையினர் ஆலோசனை வழங்கியுள்ளது. மலை காய்கறிகளான கேரட், பீட்ரூட், உருளை, முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகள் மதுரை மார்கெட்டில் இருந்து கொள்முதல் செய்து சிறுவியாபாரிகள் முதல் காய்கறி கடை மொத்த விற்பனையாளர்கள் ராமநாதபுரம், பரமக்குடி, ராமேஸ்வரம் உள்ளிட்ட மார்க்கெட்களில் விற்பனை செய்து வருகின்றனர். இதன் பொருட்டு போக்குவரத்து செலவு உள்ளிட்டவைகள் அதிகமாகும் போது அதன் விற்பனை விலையும் அதிகரித்து வருகிறது. இதனால் தற்போது பெரும்பாலோர் கிராமத்தில் விளையும் காய்கறிகளின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதைத் தொடர்ந்து இதன் சாகுபடி பரப்பும் மாவட்டத்தில் அதிகரித்துள்ளது. மழைபொய்த்த நேரத்தில் பெரும் தோட்டங்களில் தண்ணீர் தேக்கி வை க்கும் வகையில் தற் போது பண்ணை குட்டைகள் அரசு மானியத்துடன் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.கிராமத்து காய்கறிகளான புடலை, பீர்க்கை, பாகற்காய், பூசனி, அவரை, வெண்டி, கத்தரிக்காய், மற்றும் கக்காளி பயிரிடுவதற்கு ஏற்ற சூழல் அமைந்துள்ளது. மேற்கண்ட காய்கறிகள் வெளி மார்கெட்டில் இருந்து தருவிக்கும் பொ ருட்டு அதன் விலையும் அதிகரித்து வருகிறது. உள் ளூர் காய்கறிகள் சுவையாக இருப்பதால் கிராமத்து காய்கறிகளுக்கு எப்போதும் மவுசு ஏற்பட்டுள்ளது. உள்ளூரில் கிராமத்து காய்கறிகளை பயிரிடும் வகையில் தரமான விதைகள் மற்றும் ஆலோசனைகளை அட்மா திட்டம் மூலம் வேளாண்மைதுறை செயல்படுத்தி வருகிறது. நயினார்கோவில் ஒன்றியத்தில் அரசரடி வண்டல், சின்னஅக்ரமேசி, பாண்டியூர், சிறகிக்கோட்டை மும்முடிசாத்தான், கங்கைகொண்டான் காரடர்ந் தகுடி உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராமம் மற்றும் போகலூர் ஒன்றியத்தில் முதலூர்,சேமனூர், மஞ்சக்கொல்லை, காக்கனேந்தல், செவ்வூர், எஸ்.கொடிக்குளம், எட்டிவயல், உள்ளிட்ட கிராமத்தில் விளையும் கிராம காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு வீரியம் மிகுந்த விதைகள் மானியத்துடன் வழங்கப்படுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நிரந்தர சொத்துகள் வேண்டும்




மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தின் மீது 2004–ம் ஆண்டு முதலில் ஆட்சி அமைத்தபோதே புகார்கள் வரத்தொடங்கினாலும், 2009–ம் ஆண்டு நடந்த தேர்தலில் மீண்டும் வெற்றிபெறுவதற்கு உறுதுணையாக இருந்தது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம்தான். சுருக்கமாக சொன்னால், 100 நாட்கள் வேலைவாய்ப்பு திட்டம் என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு உறுதியாக 100 நாட்கள் வேலை அளிக்கும் திட்டம் இது. உடல் உழைப்பை மட்டும் மூலதனமாக செய்பவர் களுக்கான திட்டம். இதற்கான செலவில் 75 சதவீதத்தை மத்திய அரசாங்கமும், 25 சதவீதத்தை மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்கின்றன. ஆரம்பகாலம் தொட்டே இந்த திட்டத்துக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும்

பல கருத்துகள் சொல்லப்பட்டு வந்தன. இத்தனை ஆண்டுகளாக இந்த திட்டத்துக்காக எத்தனையோ கோடிகள் ரூபாய் செலவழிக்கப்பட்டுவிட்டன, இதனால் எவ்வளவு சொத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன?, எத்தனை உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன?, எவ்வளவு நீர் நிலைகள் புதிதாக உருவாக்கப்பட்டன? என்று அடுக்கடுக்காக கேள்விகள் எழுகின்றன? இந்த திட்டத்தினால் ஊழல் பெருக்கெடுத்துவிட்டது, விவசாயவேலைகளுக்கு கிராமங்களில் ஆள்கிடைக்காமல் விவசாய வேலைகள் பாதிக்கப்பட்டுவிட்டன என்றும் கூறப்பட்டது. ஆனால், குறை ஒருபக்கம் சொன்னாலும், எப்படியும் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை அரசாங்கத்தால் ஆண்–பெண் என்ற பாகுபாடு இல்லாமல் வழங்கப் படுகிறது. தமிழ்நாட்டில் இந்த ஆண்டுக்காக இந்த திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட ஒருநாள் ஊதியம் ரூ.167 ஆகும். பா.ஜ.க அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்தே, இந்த திட்டத்தில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவர திட்டமிட்டது. 100 நாட்கள் வேலைவாய்ப்பு திட்டத்தில் நிலம், நீர், மரவளங்கள் போன்ற வளங்களை மேம்படுத்தி விவசாயம் மற்றும் அதுதொடர்பான தரமான சொத்துகளை உருவாக்கும் வகையில், இந்த திட்டம் செயல்படுத்தப்படவேண்டும் என ஆலோசித்தது. மழை நீர் சேகரிப்பு, தடுப்பு அணைகள் கட்டுதல், நீர்நிலை பராமரிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என திட்டமிடப்பட்டது. தற்போது மத்திய அரசாங்கம் இந்த திட்டத்தை நாடுமுழுவதும் 2,500 மலைவாழ் மற்றும் ஏழைகள் வாழும் பின்தங்கிய பஞ்சாயத்து யூனியன்களில் மட்டும் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. திட்டக்குழு மதிப்பீட்டில் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்பவர்களின் எண்ணிக்கை, மற்றும் விவசாயத்தை சார்ந்து இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, பெண்கள் படிப்பறிவு விகிதம், மின்சார வசதி, தண்ணீர் வசதி, கழிப்பறை வசதி இல்லாத குடியிருப்பு பகுதிகள் என்ற அடிப்படையில் பின்தங்கிய பகுதிகளாக திட்டக்குழு உருவாக்கிய குறியீடு அடிப்படையில், இந்த பின்தங்கிய பஞ்சாயத்து யூனியன்கள் கணக்கிடப்படுகின்றன. இத்தனை ஆண்டுகளாக தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிகளால், தமிழ்நாட்டின்

பெரும்பாலான பகுதிகளில் இந்த வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் தற்போது மத்திய அரசாங்கம் எடுத்துள்ள முடிவுப்படி, தற்போது தமிழ்நாடு முழுவதும் 385 பஞ்சாயத்து யூனியன்களிலும் தற்போது நிறைவேற்றப்படும் இந்த 100 நாட்கள் வேலைவாய்ப்பு திட்டம், இனி 98 பஞ்சாயத்து யூனியன்களில் மட்டுமே நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் இனி விவசாய வேலைகளுக்கு ஆள்கிடைப்பதற்கு பஞ்சம் இருக்காது. மற்ற இடங்களில் அரசின் பல்வேறு திட்டங்களில் வேலைவாய்ப்பு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த திட்டத்தின்மூலம் நிரந்தர சொத்துகள் உருவாக்கியதில் சாதனை படைத்த மாநிலம் தமிழ்நாடுதான் என்ற பெருமையை பெறவேண்டும். இதுமட்டுமல்லாமல், இந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படும் பணிகளுக்காக ஒதுக்கப்படும் தொகையில் 60 சதவீதம் ஊதியத்துக்கும், 40 சதவீதம் அதற்காக தேவைப்படும் பொருட்களை வாங்கவும் பயன்படுத்தலாம் என்ற விகிதாச்சாரம் இருந்தது. ஆனால், கடந்த ஆண்டு இந்தியா முழுவதிலும் மாநிலங்களில் பொருட்களுக்காக 26.6 சதவீதம்தான் செலவழிக்கப்பட்டுள்ளது. பொருட்கள் இல்லாமல் என்ன வேலை நடந்து இருக்கும்? இனி இந்த விகிதாச்சாரம் ஊதியத்துக்கு 51 சதவீதம், பொருட்களுக்கு 49 சதவீதம் என உயர்த்தப் படப்போவது நிச்சயமாக அந்த பொருட்களை பயன்படுத்தி ஆக்கப்பூர்வமான சொத்துக்களை உருவாக்க உதவும்.

## உழவர் அட்டையின் மூலம் கல்விக்கடன், திருமண உதவி பெற்று கொள்ளலாம்



திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் வீரராகவராவ் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடந்த போது எடுத்த படம்.

திருவள்ளூர், உழவர் அட்டையின் மூலம் விவசாயிகள் கல்விக்கடன், திருமண உதவி போன்றவற்றை பெற்று கொள்ளலாம் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் வீரராகவராவ் பேசினார். விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்திற்கு கலெக்டர் கொ.வீரராகவராவ் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- திருவள்ளூர் மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனை நிலைய பஸ் ஒவ்வொரு மாதமும் தேர்தெடுக்கப்பட்ட கிராமத்திற்கு வந்து மண் மாதிரிகளை ஆய்வு செய்து வருவதால் விவசாயிகள் பருவத்திற்கு ஏற்றாற்போல் குறைந்த கட்டணம் மூலம் மண் மாதிரிகள் எடுத்து பயன் அடையவேண்டும். கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் அதிக மகசூல் பெற்றிட விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கல்விக்கடன் வேளாண்மைத்துறையின் திட்டங்கள் குறித்த கையேடு இந்த கூட்டத்தில் அனைவருக்கும் வழங்கப்பட்டது போன்று வருவாய்த்துறையிலும் திட்டங்கள் குறித்த கையேடு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். உழவர் அட்டையின் மூலம் கல்விக்கடன், திருமண உதவி போன்றவற்றை பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, துணை கலெக்டர் ராகுல்நாத், வேளாண்துறை இணை இயக்குனர் சுந்தரராஜன், ஆர்.டி.ஓ.க்கள் மாரிமுத்து, பாண்டியன், மேனுவல்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>மாவட்டம் முழுவதும் இடி-மின்னலுடன் பலத்த மழை கோமுகி அணையின் நீர்மட்டம் உயர்வு</u>**



கல்வராயன்மலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையினால் பொட்டியம் ஆறு வழியாக வந்த நீரால் கோமுகி அணையில் நீர்மட்டம் உயர்ந்து காணப்படுவதை படத்தில் காணலாம்.

விழுப்புரம் மாவட் டத்தில் நேற்று பல் வேறு பகுதிகளில் இடி- மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் கோமுகி அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

பலத்த மழை விழுப்புரத்தில் கடந்த சில நாட்களாக மிதமான மழை பெய்து வருகின்றது. இந்த நிலையில் வெப்ப சலனம் காரணமாக கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித் திருந்தது. அதன்படி நேற்று அதிகாலை விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. விழுப் புரத்தில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரையி லும் வானம் மழைக்கான அறிகுறி எதுவும் இன்றி தெளிவாக காணப்பட்டது. பின்னர் நேற்று அதிகாலை 4 மணியளவில் பலத்த காற்று வீசியது. அடுத்த சில நிமிடங் களில் லேசான மழை பெய்தது. தொடர்ந்து 4.15 மணி முதல் 5 மணி வரை கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் தாழ்வான சாலைகளில் மழை நீர் குளம்போல் தேங்கியது. இந்த கனமழையின் காரண மாக விழுப்புரம் கே.கே.சாலை, பூந்தமல்லி தெரு, நேருஜி சாலை , கோர்ட்டு வளாகம், புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் கீழ்பெரும் பாக்கம் ரெயில்வே

சுரங்கப் பாதையில் வெள்ளநீர் தேங்கி குளம் போல் காட்சியளித்தது. தாழ்வான பகுதியான மணி நகர், கணேஷ்நகர், திரு வள்ளுவர் நகர், மணிமேகலை நகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளை வெள்ளநீர் சூழ்ந்தது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி அருகே கோமுகி அணை நீர்பிடிப்பு பகுதியான கல்வராயன்மலை பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு சுமார் 1 மணிக்கு இடி மின்னலுடன் தொடங்கிய கனமழை நேற்று அதிகாலை 4 மணி வரை பலத்த மழையாக கொட்டி தீர்த்தது. இதில் கல்வராயன்மலை பொட்டி யம் ஆற்றில் இருந்து வினாடிக்கு 50 கனஅடி தண்ணீர் கோமுகி அணைக்கு சென்று கொண்டிருக்கிறது. இதனால் அணையின் நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்து நேற்று மாலை நிலவரப்படி 28 அடியாக உயர்ந்துள்ளது. அதேபோல் கல்வராயன் மலை பகுதியில் நேற்று நள் ளிரவு பெய்த மழையின் காரணமாக அடிவார பகுதியான கோமுகி அணை பகுதிகளில் உள்ள விவசாய விளைநிலங்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது. நேற்று காலை கச்சிராயப்பாளையம் அருகே மாதவச்சேரி-தாவடிப்பட்டு சாலையில் சென்ற மினிபஸ் ஒன்று சாலையில் தேங்கி நின்ற மழைநீரில் சிக்கிக் கொண்டது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு பள்ளி பஸ்கள் செல்ல முடியாத நிலை ஏற் பட்டது. அதைத் தொடர்ந்து கச்சிராயப்பாளையத்தில் இருந்து பொக்லைன் இயந் திரத்தை வரவழைத்து சேற்றில் சிக்கிய மினி பஸ்சை சுமார் 2½ மணி நேரம் போராடி மீட்ட னர். இதனால் நேற்று காலை அங்குள்ள கிராமப் புறங்களை சேர்ந்த மாணவர்கள் கள்ளக் குறிச்சி பகுதிகளுக்கு செல்ல முடியாமல் பாதி வழியிலேயே தவித்தனர். இதேபோல் கள்ளக்குறிச்சி நகரில் இடியுடன் பெய்த மழையினால் தாழ்வான பகுதி களில் மழைநீர் தேங்கியது. குறிப்பாக பஸ் நிலையம், கச்சேரி சாலை, சேலம் சாலை, காந்தி சாலை போன்ற இடங்களில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஆறாக ஓடியது. கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் இடி, மின்னலுடன் பெய்த பலத்த மழையால் கள்ளக்குறிச்சி, கல்வராயன் மலை, தியாகதுருகம் பகுதியை

சேர்ந்த விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
திண்டிவனம்

திண்டிவனத்தில் கடந்த 2 நாட்களாக கடும் வெயில் அடித்து வந்தது. இந்த நிலை யில் நேற்று முன்தினம் அதிகாலையில் வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. அதனை தொடர்ந்து சிறிது நேரத்தில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் திண்டிவனம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள முக்கிய சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் தாழ்வான இடங்களில் மழைநீர் குளம் போல் தேங் கியது. திண்டிவனம் பகுதி யில் அவ்வப்போது பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் மானாவரி நிலங் களில் மணிலா, உளுந்து ஆகிய வற்றினை பயிர் செய்துள்ள விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதே போல் மேல்மலையனூர் பகுதியிலும் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. இதனால் மேல்லையனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் அனைத்தும் தற்போது மெதுவாக நிரம்பி வருகின்றன.